சர்வதேச அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன!

# கீழடி நாகரிகம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததே!

## ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆதாரங்களுடன் செய்திக் கட்டுரை!

**சென்னை, ஜீன் 15-**

**கீழடி ஆய்வுகளின்படி தமிழர்களின் தொன்மையான நாகரிகம் பழமையானவை என்பதை சர்வதேச அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளதாக உரிய ஆதாரங்களுடன் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு (13.06.2025) செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது. அக்கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-**



THE TIMES OF INDIA

IT'S CONFIRMED, Keeladi is as old as the Gangetic plains

Radiocarbon dating traces site's origins to 580BCE, placing it in the period of India's second urbanisation

WHO'S WORKING ON KEELADI

இந்தியாவின் இரண்டாவது நகரமயமாக்கல்: கீழடி கங்கை சமவெளியைப் போலவே பழமையானது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; ரேடியோகார்பன் டேட்டிங் ஆய்வின் மூலம் கீழடி நாகரிகம் கி.மு.580ஐ சேர்ந்தது எனக் கண்டறியப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கீழடி அகழாய்வு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் கண்டறியப்பட்ட தொல்லியல் எச்சங்கள் மதுரையில் உள்ள கீழடியில் தளம் தமிழ்நாட்டின் கடந்த காலத்தின் மற்றொரு அத்தியாயத்தை வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்க ஆய்வகமான ‘பீட்டா அனலிட்டிக்ஸ்’ நடத்திய ரேடியோகார்பன் டேட்டிங் முறை ஆய்வில், இது கி.மு. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது, இது கங்கைச் சமவெளிகளின் நகரமயமாக்கலுக் குச்சமகாலத்தியதாகஅளிக்கப்படுகிறது.

**நகரமயமாக்கலுக்கு இது சான்றாகும்!**

2017-18 அகழ்வாராய்ச்சிப் பருவத்திலிருந்து தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறையால் தேதியிடப்பட்ட 29 ரேடியோ கார்பன் ஆய்வு மாதிரிகளில், முதன்மையானது கி.மு. 580 ஆம் ஆண்டிலிருந்தும், பிந்தையது கி.பி. 200 ஆம் ஆண்டு வரை என்பது தெரிய வருகிறது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் 800 ஆண்டுகளாக அங்கு வாழ்ந்த மக்களால் செழித்து வளர்ந்த நகர்ப்புற மற்றும் தொழில்துறை குடியேற்றத்தை இக் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இங்கு காணப்படும் சங்க காலத்தின் பெரிய செங்கல் கட்டமைப்புகள் சங்க இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள நகரமயமாக்கலுக்குச் சான்றாகும்.

“செங்கல் கட்டமைப்புகளுக்கு மேலே உள்ள பெரும்பாலான சான்றாதாரங்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தையவை, அதே நேரத்தில் கீழே உள்ளவை கிமு 6 ஆம் நூற்றாண்டு வரை உள்ளன” என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கே ராஜன் கூறுகிறார். “இது இந்தியாவின் இரண்டாவது நகரமய மாக்கலான கங்கைச் சமவெளிகளின் நகரமயமாக்கலுடன் கீழடியை இணைக்கிறது. 29 ரேடியோகார்பன் தேதிகளில், 12 மாதிரிகள் அசோகனுக்கு முந்தைய காலத்தில், கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முந்தை யவை.”

கொந்தகை புதைகுழியில் தோண்டியெடுக்கப்பட்ட ஒரு மண்டை ஓட்டிலிருந்து 3D தொழில்நுட்பம் மற்றும் மானுட வியல் அளவீடுகளைப் பயன்படுத்தி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கீழடி குடியிருப்பில் வாழ்ந்த பண்டைய தமிழரின் பழக்க வழக்கங்கள் வெளிப்படுத்துவதை நோக்கி தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் நெருங்கி வருவதாகவும் தெரிகிறது.

**உண்மையான முகத்தை நாங்கள் மறுகட்டமைப்போம்!**

“மண்டை ஓட்டின் அடிப்படையில், அங்கு வாழ்ந்த நபரின் வயது, உணவு முறை, பாலினம் மற்றும் உண்மையான முகத்தை நாங்கள் மறுகட்டமைப்போம்” என்கிறார் தொல் பொருள் ஆய்வாளர் ஆர். ராஜன். கி.மு.580 இல் கீழடியில் மனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் சான்றுகளை மறுகட்ட மைக்க, இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்து 20க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் மாநில தொல்பொருள் துறை இணைந்து செயல்படுகிறது, இதில் இங்கிலாந்தில் உள்ள லிவர்பூல் பல்கலைக்கழகம், இத்தாலியில் உள்ள பீசா பல்கலைக் கழகம், சிகாகோவில் உள்ள ஃபீல்ட் மியூசியம், பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், ஐஐடி காந்திநகர் மற்றும் டெக்கான் கல்லூரி ஆகியவையும் அடங்கும்.

**பண்டைய மக்களின் இடப்பெயர்வு - மக்கட் செறிவைப் புரிந்து கொள்ள உதவும்!**

கீழடியில் காணப்பட்ட விலங்கு எலும்புகளை டெக்கான் கல்லூரி ஆய்வு செய்து வருகிறது. அகழ்வாராய்ச்சியில் காளைகள், எருமைகள், ஆடுகள், பசுக்கள், செம்மறி ஆடுகள், நாய்கள், பன்றிகள், மான் மற்றும் புள்ளிமான்களின் எலும்புகள் கிடைத்துள்ளன. மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் பண்டைய மனித டி.என்.ஏ. மற்றும் விலங்கு டி.என்.ஏ.வை பகுப்பாய்வு செய்வதில் ஈடு பட்டுள்ளனர், இது கீழடி மற்றும் கொந்தகையின் தொகுக்கப்பட்ட கிராமமான கீழடியின் பண்டைய மக்களின் இடப் பெயர்வு மற்றும் மக்கட் செறிவைப் புரிந்துகொள்ள உதவும்.

இந்த அறிவியல் அணுகுமுறை ஒரே இடத்திலிருந்து 29 ரேடியோ கார்பன் தேதிகளை கீழடி தொல் பொருள் ஆய்வுத்துறை கண்டறிந் துள்ளது.

கீழடியில் தோண்டியெடுக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப் பட்ட மட்பாண்டத் துண்டுகள், எழுத்து வடிவத்தின் தோற்றத்தை கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னோக்கித் தள்ளியுள்ளன. தங்கம் மற்றும் தந்தக் கலைப்பொருட் கள் பண்டைய தமிழர்கள் ஆடம்பர வாழ்க்கையை நடத்தினர் என்பதைக் குறிக்கின்றன.

“கீழடி என்பது எழுத்தறிவு பெற்ற சமூகத்தையும் கைவினைஞர்களின் சமூகத்தையும் கொண்ட ஒரு நகர்ப்புறக் குடியிருப்பு என்பதை இது காட்டுகிறது,” என்கிறார் மாநில தொல்பொருள் துறையின் இணை இயக்குநர் ஆர். சிவானந்தம். “இது கிழக்குக் கடற்கரைத் துறைமுகமான அழகன்குளத்தை மதுரை வழியாக மேற்குக் கடற்கரையில் உள்ள முசிரிஸுடன் (முசிறி) இணைக்கும் ஒரு பண்டைய வர்த்தகப் பாதையில் ஒரு தொழில்துறை மையமாக இருந்தது.” இருப்பினும், இக் குடி யேற்றத்தின் அசல் பெயர் தெரியவில்லை.

**சங்க இலக்கியம் கற்பனை கதைகளல்ல!**

சங்க இலக்கியம் வெளிநாட்டு வர்த்தகம், ஆபரணங்கள், ரத்தினக் கற்கள், நகரங்கள் மற்றும் தெருக்கள் மற்றும் அரண் மனைக் கட்டிடங்கள் பற்றிப் பேசுகிறது. “சங்க இலக்கியம் கற்பனைக் கதைகள் அல்ல, பண்டைய தமிழர்களின் வாழ்ந்த அனுபவம் என்பதை கீழடி அகழாய்வு நிரூபித்துள்ளது” என்று இந்திய தொல்லியல் ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் கூறுகிறார்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்த இடத்தில் செவ்வக மற்றும் கன வடிவங்களில் டெரகோட்டா மற்றும் தந்த;g பகடைகளையும் கண்டுபிடித்தனர், இது சங்க இலக்கியத்தின் எட்டுத் தொகுப்புகளில் ஆறாவது ‘கலித்தொகை’யில் குறிப்பிடப் பட்டுள்ளது என்று ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் கூறுகிறார்.

“கிமு 6 ஆம் நூற்றாண்டின் நகர நாகரிகத்தின் வேர்களைக் கொண்ட ஒரே இடம் கீழடி மட்டும் அல்ல. கொடுமணல், பொருநை, சிவகளை, ஆதிச்சநல்லூர் மற்றும் கொற்கை ஆகியவையும் அந்தக் காலத்தைச் சேர்ந்தவை என ரேடியோ கார்பன் தேதி மாதிரிகள் மூலம் அறியப்படுகிறது” என்கிறார் ராஜன். “கி.மு. 785 ஆம் ஆண்டிலேயே ‘கொற்கை நாகரிகம்’ இருந்தது அகழாய்வு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு தேதி உருவாக்கியுள்ளது, இது சங்க கால நகரமயமாக்கல் பரவலாக இருந்ததைக் குறிக்கிறது.”

**தமிழ்நாட்டில் தொல்பொருள் புரிதலை மாற்றிய முதல் தளம் கீழடி!**

கீழடியில் 10 பருவகால அகழ்வாராய்ச்சிகள் நடந்த போதிலும், ஆராய்ச்சியாளர்கள் கீழடியில் உள்ள 110 ஏக்கர் நிலப்பரப்பில் 4 விழுக்காடு மட்டுமே அகழ்வாராய்ச்சி செய்துள்ளனர். மாநில அரசு அகழ்வாராய்ச்சிகளைத் தொடர திட்டமிட்டுள்ளது மட்டுமின்றி கண்டுபிடிப்புகளைக் காட்சிப் ப்படுத்த ஒரு அருங்காட்சியகத்தையும் அமைத்துள்ளது, இந்தியாவில் இதுபோன்ற முதல் அருங்காட்சியகமான இது செயல்பாட்டில் உள்ளது. “தமிழ்நாட்டில் தொல்பொருள் புரிதலை மாற்றிய முதல் தளம் கீழடி” என்கிறார் ஆர். ராஜன்.

இவ்வாறு இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

கீழடி அகழாய்வு தொடர்பாக கடுமையான பரிசோதனைகள் மூலம் நாம் நிறுவியுள்ள

# தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைக்கு - ஒன்றிய அரசு மேலும் சான்றுகள் கேட்பதா?

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜீன் 15-

“கீழடி அகழாய்வு தொடர்பாக கடுமையான பரிசோதனைகள் மூலம் நாம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைக்கு - ஒன்றிய அரசு மேலும் சான்றுகள் கேட்பதா? எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது. காலமும் கூட!” என நேற்று வெளியிட்ட வலைதளப் பதிவொன்றில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கீழடி அகழாய்வு தொடர்பாக அறிக்கைகள் அளித்த பின்னரும் ஒன்றிய அரசு மேலும் சான்றுகள் கேட்பது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கீழடி அகழாய்வில் இருந்து உலக அளவிலான ஆய்வகங்களுக்கு அனுப்பி, கரிமப் பகுப்பாய்வில் காலக்கணக்கீடு செய்யப்பட்ட மாதிரிகள், AMS அறிக்கைகளை அளித்த பின்னரும், மேலும் சான்றுகள் தேவை என்கிறார்கள் அவர்கள்! இதோ சான்று!**

**இதற்கு நேர்மாறாக, மதிப்புமிக்க வரலாற்றாய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள் கடுமையாக எதிர்க்கும் நிலையிலும், கற்பனையான சரஸ்வதி நதி நாகரிகத்தை பா.ஜ.க. ஆதரிக்கிறது. எந்த நம்பத்தகுந்த சான்றும் இல்லாமல் இதனை அவர்கள் முன்னெடுக்கிறார் கள். ஆனால் நாம் கடுமையான பரிசோதனைகள் மூலம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள்.**

**கீழடி மற்றும் தமிழ் மரபுசார் உண்மையைப் பொறுத்தவரை பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ் கும்பல் கதறுவது சான்றுகள் இல்லை என்பதால் அல்ல; கீழடி காட்டும் உண்மை அவர்கள் முன்னெடுக்கும் ‘ஸ்க்ரிப்ட்’க்கு எதிரானதாக இருப்பதால்தான்.**

**எங்கள் வரலாற்றை வெளிக்கொணர பல நூறாண்டுகள் போராடினோம். அதனை எப்படியாவது மறைத்து அழிக்க ஒவ்வொரு நாளும் அவர்கள் முயல்கிறார்கள்.**

**எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது. காலமும் கூட!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு கட்டணமில்லா

# ஆன்மிகப் பயணம் - தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை, ஜூன்.15-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள புகழ்பெற்ற அம்மன் திருக்கோயில் களுக்கு ஆடி மாதத்தில் 2,000 பக்தர்கள் கட்டணமின்றி ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட உள்ளனர். ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் தகுதியுடைய பக்தர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*



*தமிழ்நாட்டில் மக்கள் தாய்தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர். பல்வேறு திருக்கோயில்களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெரும் விருப்பமாகவும் கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு கடந்தாண்டு ஆடி மாதத்தில் புகழ்பெற்ற அம்மன் திருக்கோயில் களுக்கு 1,003 பக்தர்களும், புரட்டாசி மாதத்தில் புகழ்பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கு 1,008 பக்தர்களும் ஆன்மிகப் பயணமாக அழைத்து செல்லப்பட்டனர்.*

*அதனைத் தொடர்ந்து, 2025 - 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கையில் ”ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில் களுக்கு இவ்வாண்டு 2,000 பக்தர்கள் ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர்” என அறிவிக்கப்பட்டது. அதனை செயல்படுத்திடும் வகையில் இந்தாண்டு சென்னை, தஞ்சாவூர், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களை தலைமையிடமாக கொண்டு ஆடி மாத ஆன்மிகப் பயணம் 5 பயணத் திட்டங்களாக 2025 ஜூலை மாதம் 18, 25, ஆகஸ்ட் மாதம் 01, 08 மற்றும் 15 ஆகிய தேதிகளில் தொடங்கப்பட உள்ளது.*

*ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் பக்தர்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயதிற்கு மேல் 70 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான வருமான சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவ சான்றுடன், ஆதார் கார்டு அல்லது நிரந்தர கணக்கு எண் (Pan Card) நகல் இணைக்கப்பட வேண்டும். இந்த ஆன்மிகப் பயணத்திற்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் 11.07.2025-க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.*

*ஆடி மாத ஆன்மிகப் பயணம் தொடர்பான விவரங்களுக்கு துறையின் இணையதளத்திலோ அல்லது 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளலாம். ஆகவே, ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் பக்தர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு விண்ணப்பித்து பயன்பெறலாம்.*

*இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

---

தமிழ்நாட்டின் பகைக் கூட்டத்தை மக்களின் துணைகொண்டு வீழ்த்திடுவோம்!

# வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப்பணியாற்றிட ‘உடன்பிறப்பே வா!’

## சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பழைப்பு!

சென்னை, ஜீன்.15-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் முதல்கட்டமாக, சிதம்பரம், விழுப்புரம் மற்றும் உசிலம்பட்டி ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார்.

இதனை அடுத்து, சமூக வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப் பணியாற்றிட உடன்பிறப்பே வா!” என்று குறிப்பிட் டுள்ளார்.

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



**“தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கான வளர்ச்சியைச் சாத்தியப்படுத்தியுள்ள நமது திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடவும் தமிழ்நாட்டை வீழ்த்தத் துடிக்கும் வீணர்களுக்குத் தோல்வியைப் பரிசளித்து விரட்டிடவும் வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப்பணியாற்றிட உடன் பிறப்பே வா!**

**தமிழ்நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கத் திட்டமிடும் பகைக் கூட்டத்தை மக்களின் துணை கொண்டு வீழ்த்திடுவோம்!”**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.